# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 15.07.2018

## தமிழக நிகழ்வுகள்

- ஜுலை 15 → கல்வி வளர்ச்சி நாள்
  - முன்னாள் முதல்வர் காமராஜர் பிறந்த நாளை ஜுலை 15 கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட தமிழக கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.



## இந்திய நிகழ்வுகள்

- புற்றுநோய் செல்களை அழிக்கக்கூடிய புதிய மூலக்கூறை சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் மம்தா திரிபாதி என்பவர் கண்டுபிடித்துள்ளார்.



- “தரோகர் பவான் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்திய தொல்லியல் துறையின் (ASI) தலைமையகத்தை புதுடெல்லியில் இந்தியப் பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.




- I am not afraid of English – என்ற திட்டத்தை ஹரியானா மாநில கல்வித்துறை, அம்மாநில பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயமின்றி ஆங்கிலம் பேசுவதற்காகவும், எழுதுவதற்காகவும் தொடங்கியுள்ளது.



- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பதற்காக “The Winners”– என்ற அனைத்து மகளிர் குழுவை கொல்கத்தா காவல்துறை ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்த அமைத்துள்ளது.



- இந்தியாவில் அதிக காற்று மாசுபாடு உள்ள 10 நகரங்களில் காற்று மாசுபாட்டை குறைப்பது தொடர்பான 15-அம்ச கோரிக்கைகளை கொண்ட "Brethe India" என்ற திட்ட அறிக்கையை NITI Aayog வெளியிட்டுள்ளது.

- **குறிப்பு:**

  - உலகளவில் அதிக அளவு காற்று மாசு ஏற்படும் பெரிய நகரங்கள் பட்டியலில் டெல்லி மூன்றாவது இடத்தில் உள்ளது.

  - சீனாவின் ஷாங்காய் நகரம் முதலிடத்தில் உள்ளது.



- பிரான்ஸ் நாட்டின் 229வது தேசிய தினம் புதுச்சேரியில் உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

- **குறிப்பு**

  - ஜூலை 14, 1789 → பிரெஞ்சு புரட்சி தொடங்கிய நாள் இந்த நாளை நினைவு கூர்வதற்காக பிரான்ஸ் நாட்டு மக்கள் ஜூலை 14-ஐ தேசிய தினமாக கொண்டாடி வருகின்றனர்.




We Shine Academy™

**உலக நிகழ்வுகள்**

- நியூசிலாந்து ஆராய்ச்சியாளர்கள் உலகின் முதல் முப்பரிமான வண்ண எக்ஸ்ரே சோதனையை (3D Colour X-ray) மனிதர்களிடத்தில் பரிசோதித்துள்ளனர்.




**விளையாட்டு நிகழ்வுகள்**

- 2018ம் ஆண்டிற்கான விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் டென்னிஸ் போட்டியில் ஜெர்மனியைச் சேர்ந்த "ஏஞ்சலிக்கா கெர்பர்" (Angelique Kerber) அமெரிக்காவின் செரினா வில்லியம்சை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.



**முக்கிய தினங்கள்**

- ஜூலை 15 → உலக இளைஞர் திறன் தினம். (World Youth Skills Day) Theme : "Skills Change Lives"



We Shine Academy™




**வர்த்தக செய்திகள்**

- நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை குறைக்குவும், எந்தெந்த பொருட்களை உள்நாட்டிலேயே தயாரிக்க முடியும் என்பதை பற்றி ஆராயவும் அமைச்சரவை செயலர் “பி.கே.சின்ஹா” (P.K. Sinha) தலைமையில் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது.

